DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 127/2023

List of Witness : Lw5

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலசுப்பிரமணி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கருப்பணகவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 01/09/2025

(1 ஆவது எதிரி ஆஜர், 2 ,3 , 4 ஆகிய எதிரிகள் ஆஜர் இல்லை. மேற்படி எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் அத்திக்கோம்பையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். 24.04.2019 ஆம் தேதி எனது அக்கா மகள் நந்தினியின் வளைகாப்பு நேரத்தில் நந்தினி வீட்டிற்கும், அவரது கணவர் வீட்டிற்கும் இடையே பிரச்சனை வந்தது. நந்தினியின் கணவர் வீட்டில் பணம் கேட்டதாலும் அவர்கள் கேட்ட பணத்தை நந்தினியின் வீட்டால் தரமுடியாமல் போனதால் பிரச்சனை ஏற்பட்டது. நாங்கள் சமரசம் செய்வதற்காக சென்றோம். நந்தினியை அவரது கணவர் வீட்டில் டார்ச்சர் செய்தார்கள். நந்தினி அப்போது கர்ப்பமா இருந்தார். என்னால் தாங்க முடியவில்லை என்று அழுததால் நாங்கள் அவரை வீட்டிற்கு அழைத்து வந்தோம். ஆஜர் எதிரி தான் நந்தினியின் கணவர் ஆவார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. எனது வீட்டிற்கும் நந்தினியின் கணவர் வீட்டிற்கும் 10 கி.மீ துாரம் இருக்குமா என்றால் இல்லை, 4 கி.மீ. துாரம் இருக்கும். நந்தினிக்கும், அவரது கணவருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், நந்தினி சொல்லித்தான் தெரியும் என்றாலும் சரிதான்.

நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி கொடுமைப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. நந்தினி எனது அக்கா மகள் என்பதால் அவர் அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.09.01 17:46:23 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 01/09/2025